# தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை சென்ற ஹெலிகாப்டர், வாகனங்களில் சோதனை

**உடுப்பி, ஏப். 18:** பிரசாரத்துக்காக கர்நாடகம் சென்ற தமிழக பாஜக தலைவர் கே.அண்ணாமலை பயணித்த ஹெலிகாப்டர், வாகனங்களில் தேர்தல் அதிகாரிகள் சோதனை செய்தனர்; எனினும், இந்தச் சோதனையில் எதுவும் சிக்கவில்லை என்று தேர்தல் அதிகாரி விளக்கம் அளித்துள்ளார்.

கர்நாடகத்தில் மே 10-ஆம் தேதி நடைபெறும் பேரவைத் தேர்தலில் பாஜகவின் இணைத் தேர்தல் பொறுப்பாளராக தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை செயல்பட்டு வருகிறார். இதற்காக கர்நாடகத்தின் பெரும்பாலான பகுதிகளில் அவர் தேர்தல் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். தென் கன்னடம், உடுப்பி மாவட்டங்களில் திங்கள்கிழமை சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். குறிப்பாக, உடுப்பி மாவட்டத்தின் காப்புத் தொகுதியில் பிரசாரம் செய்தார்.

அவரின் பிரசாரத்தை மறைமுகமாகச் சாடி காப்புத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் வினய்குமார் சொரகே கூறுகையில், 'உடுப்பி மாவட்ட மக்களுக்கு விநியோகிப்பதற்காக தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை தான் பயணித்த ஹெலிகாப்டரில் பெருந்தொகையைக் கொண்டு வந்தார்' என்று குற்றம்சாட்டியிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டை உடுப்பி மாவட்ட தேர்தல் அதிகாரி சீதா முழுமையாக மறுத்தார். இதுகுறித்து அவர் கூறியதாவது:

தமிழக பாஜக தலைவர் கே.அண்ணாமலை திங்கள்கிழமை காலை 9.55 மணிக்கு ஹெலிகாப்டரில் உடுப்பிக்குவந்தார். அண்ணாமலை பயணித்த ஹெலிகாப்டர், அவர் கொண்டு வந்த பையை தேர்தல் அதிகாரிகள் சோதனை செய்தனர்.

நண்பகல் 2 மணி அளவில் கடியால் அருகேயுள்ள ஓஷன்பெர்ல் உணவு விடுதிக்கு அண்ணாமலை வந்தார். அப்போதும், அவரது வாகனத்தை தேர்தல் அதிகாரிகள் சோதனை செய்தனர். ஆனால், தேர்தல் நடத்தை விதிகளை மீறும் வகையில் எவ்வித பொருள்களும் அவரது வாகனங்களில் கிடைக்கவில்லை' என்றார்.




விபத்தில்லாமல் பேருந்து ஓட்டிய ஓட்டுநர்களுக்கு தில்லி கான்ஸ்டிடியூஷன் கிளப்பில் செவ்வாய்க்கிழமை மத்திய சாலை போக்குவரத்துத் துறை சார்பில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் விருது பெற்ற தமிழ்நாடு அரசுப் பேருந்து ஓட்டுநர்கள்.

# கேரள முதல்வருக்கு மு.க.ஸ்டாலின் நன்றி

**சென்னை, ஏப். 18:** மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்க ஆளுநரை வலியுறுத்தும் தீர்மானம் தொடர்பாக சாதகமான பதிலைக் கூறிய கேரள முதல்வருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நன்றி தெரிவித்துள்ளார்.

மாநில அரசுகளின் சட்டமசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க ஆளுநர்களுக்கு குறிப்பிட்ட கால நிர்ணயம் செய்வது தொடர்பான தீர்மானம் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானம் தொடர்பாக, பாஜக அல்லாத மாநிலங்களைச் சேர்ந்த முதல்வர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதினார்.

இந்தக் கடிதத்துக்கு சாதகமான பதிலை கேரள முதல்வர் பினராயி விஜயன் தெரிவித்துள்ளார். இதற்கு நன்றி தெரிவித்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட ட்விட்டர் பதிவு:

எனது கடிதத்துக்கு உடனடியாக பதிலளித்து முழு ஆதரவு அளித்தமைக்காக கேரள முதல்வர் பினராயி விஜயனுக்கு நன்றி. மாநில சுயாட்சியை பறிக்கும் எந்த முயற்சிக்கும் எதிராக தமிழ்நாடும் கேரளமும் பாரம்பரியமான அரணாக இருந்து வருகின்றன. ஆளுநரின் அரசியலமைப்புக்கு எதிரான அறப்போரிலும் வெற்றி பெறுவோம் என்று தெரிவித்துள்ளார்.

# ஏப். 30–க்குள் சொத்து வரி செலுத்தினால் 5% ஊக்கத் தொகை

**சென்னை, ஏப். 18:** நகர்ப்புற உள்ளாட்சிகளில் வரும் 30–ஆம் தேதிக்குள் சொத்து வரி செலுத்தினால், 5 சதவீதம் ஊக்கத் தொகை பெறலாம் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

இதுகுறித்து, தமிழக அரசு செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: சொத்து உரிமையாளர்கள் முதல்அரையாண்டுக்கான சொத்து வரியை வரும் செப். 30–ஆம் தேதிக்குள் செலுத்த வேண்டும். வரி வசூலிப்பாளர்கள், மாநகராட்சி மண்டல அலுவலகங்கள், நகராட்சி, பேரூராட்சி அலுவலகங்களில் உள்ள வசூல் மையங்கள், காசோலை, வரைவோலை, எண்ம (டிஜிட்டல்) பரிவர்த்தனை வாயிலாக சொத்து வரி செலுத்தலாம்.

வரும் 30–ஆம் தேதிக்குள் சொத்து வரியை செலுத்துவோருக்கு 5 சதவீதம் ஊக்கத் தொகை வழங்கப்படும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 11 நகரங்களில் வெயில் சதம்

**சென்னை, ஏப்.18:** தமிழகத்தில் 11 நகரங்களில் செவ்வாய்க்கிழமை வெயில் அளவு 100 டிகிரி பாரன் ஹீட்டை கடந்து பதிவானது.

சென்னை வானிலை ஆய்வு மையம் சார்பில் செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட வெப்ப அளவு (டிகிரி பாரன்ஹீட்) விவரம்): பரமத்திவேலூர் 106.7, சேலம் 106.2, ஈரோடு 105.08, வேலூர் 104.54, திருச்சி 103.82, திருப்பத்தூர் 103.28, மதுரை நகரம் 102.92, திருத்தணி 102.56, தருமபுரி 102.38, மதுரை விமான நிலையம் 102.2, கோவை 100.76, தஞ்சாவூர் 100.4.

**மிதமான மழைக்கு வாய்ப்பு:** புதன்கிழமை தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் பெரும்பாலும் வறண்ட வானிலையே நிலவும்.

தென் இந்திய பகுதிகளின் மேல் வளி மண்டலத்தின் கீழடுக்குகளில் கிழக்கு திசை காற்றும், மேற்கு திசை காற்றும் சந்திக்கும் பகுதி நிலவக்கூடும்.

இதன் காரணமாக, வியாழன் முதல் சனிக்கிழமை (ஏப்.22) வரை மூன்று நாள்கள் தமிழ்நாடு மற்றும் புதுவை, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்தில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.

சென்னையில் அதிகபட்ச வெப்ப நிலை 100 டிகிரி குறைந்த பட்ச வெப்ப நிலை 78டிகிரி என்ற அளவில் இருக்கக் கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பால் கொள்முதல் விலை உயர்வு: முதல்வருடன் ஆலோசித்து முடிவு

## அமைச்சர் நாசர்

**சென்னை, ஏப். 18:** பால் கொள்முதல் விலையை உயர்த்துவது குறித்து முதல்வருடன் ஆலோசித்து முடிவு செய்யப்படும் என்று பால்வளத் துறை அமைச்சர் சா.மு.நாசர் கூறினார்.

பால் கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி பால் உற்பத்தியாளர்கள் நடத்தி வரும் போராட்டம் குறித்து சட்டப் பேரவையில் கே.பி.முனுசாமி (அதிமுக), ஜே.ஜி.பிரின்ஸ் (காங்கிரஸ்), மா.சின்னதுரை (மார்க்சிஸ்ட்), நாகை மாலி (இந்திய கம்யூனிஸ்ட்), தி.வேல்முருகன் (தமிழக வாழ்வுரிமைக் கட்சி), ஈஸ்வரன் (கொமதேக) உள்ளிட்டோர் அரசின் கவனத்தை ஈர்த்து பேசினர்.

அதற்கு அமைச்சர் நாசர் அளித்த பதில்: பால் உற்பத்தியாளர்களின் நலனைக் கருத்தில்கொண்டு 2022, நவ. 5 முதல் பசும்பால் மற்றும் எருமைப்பால் ஆகியவற்றுக்கு கொள் முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.3 உயர்த்தி வழங்கப்பட்டது.

சமீபத்தில் காஷ்மீர் முதல் கர்நாடகம் வரை மாடுகள் ஒரு வித தோல் நோயால் பாதிக்கப்பட்டன.

இந்த நோயால் மகாராஷ்டிரத்தில் 3.50 லட்சம் மாடுகள் பாதிக்கப்பட்டு, 25 ஆயிரம் வரை மாடுகள் இறந்து போயின. பஞ்சாபில் 1.75 லட்சம் மாடுகள் பாதிக்கப்பட்டு, 18 ஆயிரம் மாடுகள் இறந்து போயின. கர்நாடகத்தில் 1.56 லட்சம் மாடுகள் பாதிக்கப்பட்டு, 12,500 மாடுகள் இறந்து போயின.

தமிழகத்தில் மட்டும் உள்ள மாடுகள் மட்டும் பாதிக்கப்படவில்லை. அதனால், மற்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் தமிழகத்தில் ரூ. 7 உயர்த்தி பாலை கொள்முதல் செய்யும் சூழல் ஏற்பட்டது.

அதைத் தொடர்ந்து, பால் உற்பத்தியாளர்களும் பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க வேண்டும் என்கிற கோரிக்கை வைத்து வருகின்றனர்.

இது தொடர்பாக முதல்வருடன் ஆலோசித்து முடிவு காணப்படும் என்றார்.

# வேங்கைவயல் விவகாரம்: விசாரணை ஆணைய பரிந்துரைக்காக காத்திருப்பு

**சென்னை, ஏப். 18:** வேங்கைவயல் சம்பவம் தொடர்பாக, ஒருநபர் விசாரணை ஆணையத்தின் பரிந்துரைகளுக்காககாத்திருப்பதாக சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

சட்டப் பேரவையில் ஆதிதிராவிடர்நலத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்த விவாதத்தில் அதிமுக உறுப்பினர் மரகதம் குமரவேல், மார்க்சிஸ்ட் உறுப்பினர் சின்னதுரை ஆகியோர் வேங்கைவயல் சம்பவம் தொடர்பாக கேள்விகள் எழுப்பினர். இதற்கு அமைச்சர் எஸ்.ரகுபதி அளித்த பதில்:

வேங்கைவயல் என்பது குக்கிராமமாகும். அங்கு யார் வந்து போகிறார்கள் என்பதைக் கண்டறிய முடியாது. அங்கு

நடைபெற்ற சம்பவம் தொடர்பாக விசாரித்த உயர் நீதிமன்றம், ஓய்வு பெற்ற நீதிபதி சத்தியநாராயணன் தலைமையில் விசாரணை ஆணையம் அமைத்துள்ளது. இந்த ஆணையத்தின் பரிந்துரைகள் மற்றும் நீதிமன்ற உத்தரவுக்காக

காத்திருக்கிறோம். இத்துடன், தமிழக காவல் துறை சார்பில் சிபிசிஐடி விசாரணையும் நடந்து வருகிறது என்றார்.

இதனிடையே, விவாதத்தில் பேசியவிசிகஉறுப்பினர்எஸ்.எஸ். பாலாஜி, சென்னை ஐஐடி.,யில் ஒரு மாதத்தில் 4 மாணவர்கள் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் குறித்து கேள்வி எழுப்பினார். அதற்கு பதிலளித்த உயர்கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி, 'ஐஐடி மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. மாணவர்கள் தொடர்பான சம்பவம் குறித்து மத்திய அரசிடமும், ஐஐடி., நிர்வாகத்திடமும் தனது வலியுறுத்தல்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்வைத்துள்ளார்' என்று தெரிவித்தார்.

# 100 நாள் வேலை சமூக தணிக்கை: புகார் அளிக்கலாம்

**சென்னை, ஏப். 18:** 100 நாள் வேலைத் திட்டத்தின் ஓர் அங்கமாக செய்யப்படும் சமூகத் தணிக்கையில் புகார்கள், குறைகள் ஏதேனும் இருந்தால் அவற்றைத் தெரிவிக்கலாம் என தமிழக அரசு கூறியுள்ளது.

இதுகுறித்து தமிழக அரசு செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கிராமப்புற பகுதிகளில் நூறு நாள் வேலைத் திட்டப் பணிகள் கிராம சபையின் மூலமாக சமூக தணிக்கை செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இந்தப் பணி சமூகத் தணிக்கை சங்கத்தின் வழியாக நடைபெறுகிறது. இந்த தணிக்கையின் போது, குறைகள், புகார்கள் ஏதேனும் இருந்தால் அவற்றைத் தெரிவிக்கலாம். இதற்கான கட்டணமில்லாத தொலைபேசி எண்ணை (1800 425 2152) தொடர்பு கொள்ளலாம்.

மாவட்ட வாரியாக குறைதீர்க்கும் அலுவலர்களின் விவரங்கள், வாட்ஸ்ஆப் மற்றும் மின்னஞ்சல் முகவரி ஆகிய விவரங்களை tnrd.tn.gov.in என்ற இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம் என்று அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


**MISSING**

The following Original Registered document was missing in transit at Chennai while bringing the document from Koyembedu .to Vadapalani. on 03.04.2023.The details of the document are under :

Document No:2646 of 1968 dated 25-05-1968 Registered at Sub Registrar Office, Vatluru,West Godavari District, Andhra Pradesh.

Executed by : Mandapaka Subba Rao, S/o Pullaiah, Bhogapuram Village, Eluru.

In favour of Mandapaka Panduranga Rao, S/o Subba Rao, being Minor represented by his grandfather Bathina Sobhanadri, S/o Venkanna. by PTNVAR Sudarsan. Mobile : 63006 40054

S.PAVESH KANNAN M.A.,M.L.,
Advocate
Mob: 94446 30003

**படிவ எண் CAA. 2**

[நிறுவன (இணக்கம், ஏற்பாடு மற்றும் ஒருங்கிணைப்பு) விதிகள் 2016, பிரிவு 230(3) மற்றும் விதிகள் 6 & 7 ஆகியவற்றின் கீழ்]

தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம்
மன்ற அமர்வு-II, சென்னை முன்னிலையில்
IBA/1017/2019 கீழ் CA (CAA)/11 (CHE)/2023
கொண்ட
ஸ்ரீ அம்பிகா சுகர்ஸ் லிமிடெட் (கலைப்பு நிலை)
[CIN No : U15421TN1988PLC015660]
மற்றும்
நிறுவனச் சட்டம் 2013, பிரிவு 230 மற்றும் அதன் கீழான உரிய இதர பிரிவுகள் அதனுடன் இன்சால்வன்சி மற்றும் பாங்க்ரப்ட்சி சட்டம் 2016-இன் உரிய பிரிவுகள் தொடர்பானது.

இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் கலைப்பு நிலையில் உள்ள M/s.ஸ்ரீ அம்பிகா சுகர்ஸ் லிமிடெட் (இனி "SASL-CUL" எனக் குறிப்பிடப்படும்) நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கும் / கடனாளர்களுக்கும் M/s.SNJ டிஸ்டில்லர்ஸ் பிரைவேட் லிமிடெட் (இனி "SNJDPL" எனக் குறிப்பிடப்படும்) நிறுவனத்துக்கும் இடையிலான ஏற்பாடு அல்லது இணக்கத் திட்டம் குறித்துப் பரிசீலிக்கவும், ஏற்புடையதாக இருப்பின் மாற்றங்களுடனோ இன்றியோ ஒப்புதலளிக்கவும் SASL-CUL நிறுவனத்தின் "பங்குதாரர்கள் ஆணையக் குழுக்கூட்ட"த்தை நடத்த மாண்பமை தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்தின் சென்னை II-ஆம் அமர்வு ஏப்ரல் 13, 2023 நாளிட்ட ஆணை மூலம் உத்தரவிட்டுள்ளது.

எனவே இதன் மூலம் மேலும் அறிவிப்பது யாதெனில் மேற்கண்ட ஆணைப்படியும் அதன் வழிகாட்டுதல்களின்படியும் SASL-CUL நிறுவனப் "பங்குதாரர்கள் ஆணையக் குழுக்கூட்டம்" மின்னணு வழியில் (காணொளிக் கலந்துரையாடல் மூலம்) வியாழக்கிழமை, ஜூன் 1, 2023 (01.06.2023) அன்று மாலை 4:00 மணிக்கு நடைபெற உள்ளதால் ஈட்டுறுதி நிதிக் கடனாளர்களும் (தனிப்பட்டோர்) இதர அனைத்துப் பிரிவுகளுக்கும் வகைப்பாடுகளுக்கும் பங்குதாரர்களாக அமர்த்தப்பட்டுள்ளவர்களின் அதிகாரப்பூர்வப் பிரதிநிதிகளும் குறிப்பிட்ட நேரத்திலும் இடத்திலும் கலந்து கொள்ள வேண்டுகிறோம்.

SASL-CUL நிறுவனத்தின் பங்குதாரர்கள் / கடனாளர்கள் உடனானதும் SNJDPL நிறுவனத்தால் முன்மொழியப்பட்டதுமான மேற்கண்ட ஏற்பாடு அல்லது இணக்கத் திட்டத்தின் நகல்களை இலவசமாகப் பெற அணுக வேண்டிய முகவரி: கலைப்பு அலுவலர் திரு.அனுராக் கோயல் அவர்களால் மேலாண்மை செய்யப்படும் கூட்டுரிமைக் கடன் நிறுவனத்தின் சென்னை அலுவலகம், எல்டரடோ, 4ஆவது தளம், நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-600034 அல்லது கலைப்பு அலுவலர் அலுவலகம், மனை எண் 6, முதல் தளம், ஸ்டேட் பாங்கு நகர், வெளிவட்டச் சாலை, பஸ்சிம் விகார், புது தில்லி - 110063. அல்லது cirp.ambikasugars@caanurag.com எனும் மின்னஞ்சல் முகவரிக்குக் கோரிக்கை அனுப்பியும் திட்ட நகல்களை மின்னணு வடிவில் பெற்றுக் கொள்ளலாம்.

மாண்பமை தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயமானது திரு.V.நல்லசேனாபதி அவர்களை SASL-CUL நிறுவனப் பங்குதாரர்கள் ஆணையக் குழுக்கூட்டத்துக்கான அவைத்தலைவராக அமர்த்தியுள்ளது. தவறினால் SASL-CUL நிறுவனத்தின் கலைப்பு அலுவலரான திரு.அனுராக் கோயல் அவர்கள் குழுக்கூட்டத்துக்குத் தலைமை வகிப்பார். மேற்கண்ட ஏற்பாட்டுத் திட்டத்துக்குக் குறிப்பிட்ட குழுக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டால் அது மேற்கொண்டு மாண்பமை தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்தின் சென்னை II-ஆம் மன்ற அமர்வுடைய ஒப்புதலுக்கும் உட்பட்டது.

ஒம்/-
நாள்: 19.04.2023 V.நல்லசேனாபதி
இடம்: சென்னை குழுக்கூட்டத்தின் அவைத்தலைவர்

**தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம்**
(தமிழக அரசு நிறுவனம்)
எண்.86, C and D, 2வது பிரதான சாலை,
அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை - 600 058.
தொலைபேசி எண்: 044 – 2625 7664.

**பொது அறிவிப்பு**

M/s.Shrivik என்ற நிறுவனத்தின் பதிவு அலுவலகம் மற்றும் அதனுடைய பேக்டரி யூனிட்–I எண். 130, டைனி செக்டார், சிட்கோ தொழிற்பேட்டை, அம்பத்தூர், சென்னை – 98, பேக்டரி யூனிட்–II எண். 184, சிட்கோ தொழிற்பேட்டை, அம்பத்தூர், சென்னை – 98 மற்றும் பேக்டரி யூனிட் – III எண். 26B/10, 5வது தெரு, சிட்கோ தொழிற்பேட்டை, அம்பத்தூர், சென்னை – 98 மேற்படி நிறுவனத்தின் 22.11.1995 தேதியிட்ட ஆவண எண். 5122/1995, குன்றூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் நகலை M/s.Shrivik உரிமையாளர் திரு வி.ராஜு அவர்கள் எங்கு வைத்தார் என்று தெரியாத காரணத்தை தெரிவித்தார் ஆகவே மேற்கண்ட பத்திரத்தில் அடங்கிய சொத்தானது சைதாப்பேட்டை தாலுக்கா மற்றும் செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் உள்ள அம்பத்தூர் தொழிற்பேட்டையில் டைனி ஷெட் எண்.130 கொண்ட நிலம்/நிலம் மற்றும் கட்டிடம், அதன் அளவு 37.6 x 37.6 சதுர அடி நிலத்தின் கட்டப்பட்ட பரப்பளவு 400 சதுர அடி அதன் சர்வே எண். 260/4 part of பட்டரவாக்கம் கிராமத்தை சேர்ந்தது.

தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் அம்பத்தூர் கிளை மேற்படி M/s.Shrivik நிறுவனத்திடமிருந்து மேற்கண்ட சொத்தை அடமானம் எடுத்துக் கொள்வதாக உத்தேசிக்கப்பட்டுள்ளது. யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால், உரிய ஆவணங்கள் மற்றும் ஆதாரங்களுடன் இந்தத் தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் எழுத்துப்பூர்வமாக எங்கள் நிறுவனத்திற்குத் தெரிவிக்கவும். இல்லையெனில், குறிப்பிடப்பட்ட சொத்து மற்றும் சொத்தின் மீது எந்தவிதமான தடையும் இல்லை எனக் கருதி இந்த சொத்தை எங்கள் நிறுவனம் அடமானத்திற்கு எடுத்துக் கொள்ளும் என்பதை இந்த பொது அறிவிப்பின் மூலமாக தெரிவித்துக் கொள்கிறோம்.

செ.ம.தொ.இ / 385 / வரைகலை / 2023 கிளை மேலாளர்

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

தமிழ்நாடு அரசு
**காவேரிப்பாக்கம் பேரூராட்சி**
இராணிப்பேட்டை மாவட்டம்
ந.க.எண்.204/2022 நாள்: 17.04.2023
**மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (Two Cover System)**

[illegible]

செயல் அலுவலர்
காவேரிப்பாக்கம் பேரூராட்சி, இராணிப்பேட்டை மாவட்டம்.

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

கோயம்புத்தூர் மாவட்டம்
**ஒத்தக்கால்மண்டபம் (தேர்வுநிலை) பேரூராட்சி**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

[illegible]

**திமிரி சிறப்புநிலை பேரூராட்சி, இராணிப்பேட்டை மாவட்டம்**
**மறுஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (Two Cover System)**

[illegible]

**பொது அறிவிப்பு**

[illegible]

**சொத்து விவரம்**

[illegible]

19.04.2023

**சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்**
Chola Enter a better life
பெருநிறுவன அலுவலகம்: எண்.2, டேர் ஹவுஸ், 1-வது தளம், NSC போஸ் சாலை, சென்னை - 600 001.
கிளை அலுவலகம்: ASV ஆதர்ஷ் டவர்ஸ், 719, பதாரி சாலை, அண்ணா சாலை எதிரில், சென்னை, தமிழ்நாடு-600002.
தொடர்புக்கு: திரு.தியாகராஜன் கைபேசி: 9940516215 - திரு.நந்தகுமார் கைபேசி: 9894058786

**அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு**

பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு, பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் சட்டம் - உடன் படிக்க - பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 9(1)-ன் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் பொதுமக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர் / இணை கடன்தாரர் / அடமானதாரர்களுக்கும் அறிவிக்கப்படுவது யாதெனில், இதன் கீழ் விவரிக்கப்பட்ட அசையா சொத்துக்கள், ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு அடமானம் செய்யப்பட்டு, M/s.சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்-ன் அதிகாரப்பூர்வ அதிகாரியால் (இது முதல் M/s.சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்-என்று அழைக்கப்படும்) அடையாளபூர்வ / அசல் சுவாதீனம் எடுக்கப்பட்டுள்ளன. அந்த ஜாமீன் சொத்துக்கள் "இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" "இருக்கின்றவற்றுடன்" என்ற அடிப்படையில் மின்னணு ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படுவது யாதெனில், நாங்கள் பொது மின்னணு ஏலத்தை https://bankauctions.in/ என்ற வலைதளம் மூலம் நடத்த உள்ளோம்.

| கணக்கு எண், மற்றும் கடன்தாரர் /இணை கடன்தாரர் / அடமானதாரர்கள் பெயர் | தேதி & பிரிவு 13(2)ன் கீழ் கோரிக்கை அறிவிப்பின் படி தொகை | சொத்துக்களின் விபரம் | குறைந்தபட்ச விலை டேவணித்தொகை ஏல உயர்வு தொகை |
|---|---|---|---|
| கடன் எண்: X0HECHE00002009974 / X0HECHE00002391991 & X0HEENN00003066524 1. சீனிவாசன்.K எண்.32/A, தேவ் அப்பார்ட்மெண்ட்ஸ், 3G டான்சி நகர், தரமணி சாலை, வேளச்சேரி, சென்னை - 600 042. 2. ராணி A, பழைய எண். 59, புதிய எண். 3, ப்ளாட் எண். 9, 2வது தளம், இனக்புரி 1வது தெரு, வேளச்சேரி, சென்னை - 600 042. 3. கேஷவ் குமார் S எண் 5A, B1, 1வது தளம், விஷ்வக்சேனா ஸ்ரீதேவி, VGP செல்வாநகர் பிரதான சாலை, சென்னை - 600 042. | 30.11.2021 & 20.11.2021 அன்று வரை ரூ. 51,92,193.56 | காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தாலுகா, மறைமலைநகர் நகராட்சிக்குட்பட்ட திருக்கச்சூர் கிராமத்தில் சர்வே எண். 531/5A, 531/3B, 531/5B, 531/5C & 534/1 பகுதி, புதிய சர்வே எண். 531/3B பகுதி, 531/5A1, 531/5A2, 531/5B1, 531/5C4 & 534/1B-ன் படி மொத்தமுள்ள 9 ஏக்கர் 31.6 செண்ட் மற்றும் 1944 சதுர அடி நிலத்தில் "மெட்ரோ போலிஸ்" என அறியப்படும் திட்டத்தில் 943.93 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலத்துடன் A பிளாக்கில் 4வது தளத்தில் 1957 சதுர அடியில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்பு ப்ளாட் எண். 404 மற்றும் அதனுடன் அடிதளத்தில் ஒரு மூடிய கார் பார்க்கிங் உடன், மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். (அசல் சுவாதீனம்) | ரூ. 60,50,000/- ரூ. 6,05,000/- ரூ. 1,00,000/- |
| கடன் எண்: X0HECHE00003446866 1. பிரமாவதி.T 2. விஷ்ணு சேகர்.T இருவரின் முகவரி: எண்.13/D, நந்தோணி அம்மன் கோயில் தெரு விரிவு, வில்லிவாக்கம், அம்பத்தூர் - 600 049. | 22.04.2022 & ரூ. 22,16,163.84/- 22.04.2022 அன்று வரை | வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் செம்பியம் துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட எண்.8, புதிய எண்.19, பந்தர் கார்டன் பிரதான தெரு, சிறுவள்ளூர் கிராமம், அயனாவரம் தாலுகா, சென்னை மாவட்டம் என்ற முகவரியில் பிளாக் எண்.13, டவுன் சர்வே எண். 42/1, TSLR-ன் படி டவுன் சர்வே எண். 42/3-ன் படி 670 சதுர அடி பரப்பளவு நிலம் மற்றும் கட்டிடம், மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும் மற்றும் எல்லைகள்: வடக்கில்: பந்தர் கார்டன் பிரதான தெரு, தெற்கில்: திரு.முத்துகுமார சுவாமி அவர்களுக்கு சொந்தமான சொத்து, கிழக்கில்: திருராஜசேகர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதி, மேற்கில்: வேணுகோபால் சுவாமி கோவில் தெரு, அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில் : 30 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில் : 30 அடி, தெற்கு வடக்காக கிழக்கு பகுதியில் : 22 அடி, தெற்கு வடக்காக மேற்கு பகுதியில் : 22 அடி. (அடையாளபூர்வ சுவாதீனம்) | ரூ.56,70,000/- ரூ. 5,67,000/- ரூ. 1,00,000/- |

**மின்னணு ஏல தேதி மற்றும் நேரம் : 08.05.2023 அன்று காலை 11.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை**
**(ஒவ்வொன்றும் 5 நிமிடம் வரம்பற்ற நீட்டிப்புடன்)**
**டேவணித்தொகை சமர்பிக்க கடைசி தேதி: 05.05.2023 அன்று மாலை 5.30 மணி வரை**
**சொத்து ஆய்வுக்கான தேதி : 02.05.2023 மற்றும் 03.05.2023 (காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை)**

1) விருப்பமுள்ள அனைத்து பங்கேற்பாளர்களும் / ஏலதாரர்களும் வலைதளம் https://bankauctions.in/ & https://www.cholamandalam.com/auction-notices-யை பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விபரங்களுக்கும், உதவிக்கும் செயல்முறை மற்றும் மின்னணு ஏலத்துக்கான ஆன்லைன் பயிற்சிக்கும் உத்தேச ஏலதாரர்கள் திரு.முகமது ரஹீம் - 81240 00030, M/s.4Closure, திரு.P.சுப்பாராவ், ஆகியோரை தொலைபேசி எண். 8142000061, மின்னஞ்சல் முகவரி : subbarao@bankauctions.in, bharathi@bankauctions.in-ல் தொடர்பு கொள்ளலாம்.
2) விதிகள் மற்றும் நிபந்தனைகளில் தேவைப்படும் மேல் விபரங்களுக்கும் மின்னணு ஏலத்தில் பங்கேற்பதற்கும் https://bankauctions.in/ & https://www.cholamandalam.com/auction-notices-என்ற வலைதளத்தை தயவு கூர்ந்து பார்வையிடவும்.

**இவ்வறிவிப்பு, சட்டபூர்வமான பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 9(1)ன் கீழான 15 நாட்கள் கெடு அறிவிப்பாகும்.**

தேதி : 19.04.2023 அதிகாரப்பூர்வ அலுவலர்
இடம் : சென்னை M/s. சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

## வரி விளம்பரம்

**PUBLIC NOTICE**

CHANGE OF NAME

My Daughter, D, LOHADHARANYA born on 5th July 2021 (District of Birth Chennai) residing at No. 217, T.V.S. Nagar, 6th Cross Street, Korattur North, Chennai - 600076, Shall henceforth be known as D. LOHANDHIYA

S. DINESH
(Father)

**CHANGE OF NAME**

I, MOTHILAL.G, S/o.Thiru. Govindarajan. S, born on 11 th February 1990 (Native District:-Chennai) residing at No:28, Selliamman Nagar, Perumalpattu, Tiruvallur – 602024 shall henceforth be known as **RAJA RAJAN. G**

**MOTHILAL.G**

**CHANGE OF NAME**

I, T. Shunmugam, son of Thiru A. Thirunavukkarasu, born on 11th July 1951 (District of Birth : Chennai), residing at No. 4/570, Veerama Munivar Salai, Mugappair East, Chennai - 600 037, shall henceforth be known as **SHANMUGAM .T**

**Chennai,**
**28th December 2022**

**CHANGE OF NAME**

I, **RANI** (Old name) W/o. Vulchi Srinivasulu, residing at No.18 Block, D4, North Station Road, Sri Durga Orchids Apartments, Annai Nagar, Korattur, Tiruvallur District, Tamil Nadu shall henceforth be known as **VULCHI RANI** (New name).

Tirupati, 13.04.2023 Rani

**CHANGE OF NAME**

Thiru **ELAVARASAN. B** (Hindu), son of Thiru Babu. M born on 15th August 1996 (District of Birth: Chennai), residing at No. 7/13, Pandaram Street, Purasiwalkam Vepery, Chennai-600 007, has converted to Christianity with the name of **EMMANUEL SAM** on 2nd February 2022

Elavarasan. B
Chennai, 24th March 2023.

**பெயர் மாற்றம்**

**N.நந்தினி ஐயர்** (என்கிற) **N. நந்தினி,** த/பெ. திரு. V. நடராஜன், பிறந்த தேதி : 04.04.2003 (பிறந்த மாவட்டம்: மும்பை – தானே – மகாராஷ்டிரா), எண். 10, முதல் தளம், முசிறி சுப்ரமணியம் சாலை, பழைய ஆலிவர் ரோடு, மயிலாப்பூர், சென்னை–600 004–ல் வசிக்கும் நான் இனி முதல் **நந்தினி நடராஜன் ஐயர்** என்று அழைக்கப்படுகிறேன்.

N.நந்தினி ஐயர் (என்கிற) N. நந்தினி

ஞாயிறுதோறும் தினமணியுடன்... கொண்டாட்டம்